Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 29, 2022

புதன்கிழமை ஜூன் 29, 2022 | ஒளி: 08 கதிர்: 035 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ FREE

வெள்ளிக்கிழமை முதல்

யாழ். விமான நிலைய சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகளை ஜூலை மாதம் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிப்பது தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது. அடிப்படை சர்வதேச ஒழுங்குபடுத்தல் தேவைகளை உறுதிப்படுத்திக் கொண்டு, யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான

தொடர்ச்சி P2

எரிபொருள் தட்டுப்பாடு:

8 தொழிற்சங்கங்கள் 2 நாள் வேலைநிறுத்தம்

தீர்வு கிடைக்காவிடின் காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட 8 துணை சுகாதார தொழிற்சங்கங்கள், இன்று (29) மற்றும் வியாழன் (30) ஆகிய இரு தினங்களில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சுகாதார அதிகாரிகள், ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர்கள் உட்பட துணை சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் கடமைக்கு சமூகம் தர மாட்டார்கள் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

மகப்பேறு மற்றும் சிசு சிகிச்சை நிலையங்களும் இயங்காது என்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் வீட்டு பிரசவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அவர், வீட்டுப் பிரசவத்தில் ஈடுபடும் அதிகாரிகளும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2

3 க்கு இல்லை 5 க்கு கூட்டுவோம்

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பாடசாலை போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சங்கத்தின் தலைவர் மல்சிறி டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பின் புறநகர் பகுதிகளில் 3 நாள்கள் மாத்திரம் நடைபெறும் பாடசாலைகளில்

தொடர்ச்சி P2

இலங்கை சிறார்களுக்கு உணவளிப்பதற்காக

20 மில். டொலர் மேலதிக உதவி

ஜி7 உச்சிமாநாட்டில் அறிவித்தார் ஜனாதிபதி பைடன்

இலங்கையில் உணவுப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக மேலதிக உதவியாக இலங்கைக்கு 20 மில்லியன் டொலரை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கொடுங்கோல் அரசாங்கத்துக்கு எதிராக

மக்கள் எழுச்சி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

அரசாங்கம் நாட்டை பாரிய அவல நிலையை நோக்கியே இட்டுச்சென்றுள்ளதாகவும், இதற்கு எதிராக ஜனநாயக ரீதியான மக்கள் எழுச்சி உருவாக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வெள்ளி முதல் பஸ் கட்டண உயர்வு

குறைந்த கட்டணம் ரூ.40

ஜூலை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் பஸ் கட்டணத்தை 30 சதவீதம் அதிகரிக்குமாறும் குறைந்தபட்ச கட்டணத்தை 40 ரூபாயாக அதிகரிக்குமாறும் பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலான் மிரண்டா, நேற்று (28) தெரிவித்தார்.

குறித்த கோரிக்கையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பரிசீலித்து இன்று (29) அனுமதி வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,

தொடர்ச்சி P2

ரஷ்ய ஏரோஃப்ளோட் விமான விவகாரம்

வழக்கு தள்ளுபடிக்கு சட்டமா அதிபர் கோரிக்கை

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை விடுத்து, விமான நிலைய சேவைகள் நிறுவனம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் நேற்று (28) நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தது.

ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவின் செயற்பாட்டை இடைநிறுத்தி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்க, ஜூன் 6ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி, உண்மைகளை தவறாக சித்திரித்து, இந்தத் தடை உத்தரவு பெறப்பட்டதாக சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட்ட உண்மைகளை கவனத்தில் எடுத்ததன் பின்னரே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

22ஆவது திருத்தத்தை சமர்ப்பிக்க அனுமதி

அரசியலமைப்பின் இருபத்திரண்டாவது திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பான அடிப்படைச் சட்டமூலத்துக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய,

தொடர்ச்சி P2

வெளிநாட்டு கம்பனிகளிடம் எரிபொருள் பெற ஏற்பாடு

பெற்றோலிய உற்பத்திகளை மேற்கொள்கின்ற நாடுகளில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய்க் கம்பனிகளுடன் நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொண்டு, எமது நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக்கு அழுத்தங்கள் ஏற்படாத வகையில் குறித்த கம்பனிகளின் நிதியைப் பயன்படுத்தி எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் விநியோகத்தில் 90 சதவீதமானவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதுடன், எஞ்சிய 10 சத வீதமான விநியோகம் இந்திய ஒயில் கம்பனியால் மேற்கொள்ளப்படுகின்றது.

தொடர்ச்சி P2

ரயில் கட்டணங்களை திருத்த அனுமதி

ரயில் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அரச கொள்கைகளுக்கு அமைய பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை ரயில்வே திணைக்களம் சலுகை அடிப்படையிலான கட்டண முறையைப் பின்பற்றுகின்றது.

தொடர்ச்சி P2

உயிர் பிரியும் முன்னர் விடுதலை கொடுங்கள்

40 நாள்களாக உண்ணாவிரதத்தில் போராடிக் கொண்டிருக்கும், சிறப்பு முகாமில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு அவர்களது உயிர் பிரியும் முன்னர் விடுதலை வழங்குமாறு கோரி, ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

சிறப்பு முகாமில் உள்ள இளைஞர்களின் பெற்றோர், உறவினர்கள், இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாப்பேட்டை அடுத்த அணைக்கட்டு பகுதியில் உள்ள தமிழர் குடியிருப்பு முகாமில் நேற்று முன்தினம் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முகாம் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, சிறப்பு முகாமை இழுத்து மூட வேண்டும் என்றும் அங்கிருக்கும் அவர்களது பிள்ளைகளையும் உறவுகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தொடர்ச்சி P2

எம்.பிக்களை கொல்ல மக்கள் விரும்புகின்றனர்

தற்போதைய சூழ்நிலை காரணமாக, இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகத்தை பேணுவது கடினமாக உள்ளது என்று தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் கொல்ல விரும்புகிறார்கள் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கண்ணிவெடி அகற்றல் பணி ஓராண்டுக்கு நீடிப்பு

ஜப்பான் உதவி ஒப்பந்தம் முகமாலையில் கைச்சாத்து

எஸ் தில்லைநாதன்

'டாஸ்' மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியின் அடுத்த ஓராண்டுக்கான ஜப்பான் நாட்டு உதவி ஒப்பந்தம், முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறும் பகுதியில் வைத்து நேற்று (27) காலை 8.30 மணியளவில் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஸி கிடேகி குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு, நன்கொடையாளர் சார்பில் ஒப்பமிட்டதுடன், அவருடன் ஜப்பான் தூதரகத்தின் 2ஆம் நிலை செயலாளர் இகராசி

டோருவும் ஒப்பமிட்டார்.

'டாஸ்' நிறுவனத்தின் சார்பாக பணிப்பாளரும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளருமான ஆனந்த சந்ரசிறி மற்றும் செயற்திட்ட முகாமையாளர் சுனில் ஆரியசேன ஆகியோர் ஒப்பமிட்டனர்.

குறித்த பணியினை முன்னெடுக்க 681,812 அமெரிக்க டொலருக்கான மானிய ஒப்பந்தமே இதன் போது கையொப்பமிடப்பட்டது.

'டாஸ்' நிறுவனத்தால், 19.06.2022 வரை அனைத்து நன்கொடையாளர்களின் நிதி உதவியுடன் 15.82 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 106,304 மனிதருக்கு தீங்கேற்படுத்தும் கண்ணிவெடிகளும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

8 தொழிற்சங்கங்கள் 2 நாள் வேலைநிறுத்தம்

போதனா மற்றும் தள வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய பொது வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், மருந்து விநியோகங்கள் என்பன தடைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ள நிலையில், சுகாதார பணியாளர்களுக்கு பணிக்கு வருவதற்கு எரிபொருள் கிடைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

30,000 - 50,000 வரை மாத ஊதியம் பெறும் சுகாதார பணியாளர்கள் அதிகரித்து வரும் எரிபொருள் விலையை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும் இவை உடனடி தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் என்றும் சுட்டிக்காட்டினார்.

யாழ். விமான நிலைய சேவைகள் ஆரம்பம்

தொழிற்பாடுகள் 2019 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், கொவிட் 19 தொற்று நிலைமையால் அதன் நடவடிக்கைகள் 2020 மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டன.

அவ்விமான நிலையத்திலிருந்து தென்னிந்திய விமான நிலையம் வரைக்கும் வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கு அமைவான விமானப் பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச ரீதியாகவும் உள்ளூரிலும் நிறுவப்பட்டுள்ள விமானக் கம்பனிகள் தற்போது வேண்டுகோள்களைச் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

20 மில். டொலர் மேலதிக உதவி

ஜெர்மனியில் நடந்த ஜி-7 மாநாட்டில் பங்கேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அமெரிக்கா மேற்கொண்ட ஏனைய சமீபத்திய நிதியளிப்பு அறிவிப்புகளின் தொடராக மேற்கொள்ளப்படும் இந்த புதிய உதவிக்கான அறிவிப்பானது தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது மிகவும் தேவையுடைய இலங்கையர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

இந்த நிதியளிப்பானது எதிர்வரும் 15 மாத காலப்பகுதியில் 800,000 இற்கும் மேற்பட்ட இலங்கை சிறார்களுக்கு உணவளிக்கும் ஒரு பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவிசெய்வதையும் மற்றும் 27,000 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவு வவுச்சர்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய இலங்கை சமூகங்களில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாய உதவிகள் மற்றும் பண பங்களிப்பு ஆகியவற்றின் ஊடாக சுமார் 30,000 விவசாயிகளுக்கு உதவிசெய்யவும் இந்த முயற்சி திட்டமிட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கைக்கான மேலதிக உதவியாக 20 மில்லியன் டொலரை வழங்குவதாக ஜனாதிபதி பைடன் மேற்கொண்ட இந்த அறிவிப்பானது, உணவுப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்கை மக்களதும் பொருளாதார நல்வாழ்வு என்பன தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை நிரூபிக்கிறது" என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் கூறினார்.

"பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவிசெய்வதுடன் இந்த உதவியானது, அது மிகவும் தேவைப்படும் சமூகங்கள் மற்றும் சிறார்களை சென்றடைவதை அமெரிக்கா உறுதி செய்யும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

அறிவிக்கப்பட்ட 20 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவியானது, பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளாக அண்மையில் அமெரிக்கா உறுதியளித்த கிட்டத்தட்ட 12 மில்லியன் டொலருக்கு மேலதிகமாக வழங்கப்படுகிறது. இவ்வறிப்புடன் 2022 ஜூன் 16ஆம் திகதி முதல் இலங்கை மக்களுக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகளின் மொத்தப் பெறுமதி 32 மில்லியன் டொலராக அதிகரிக்கிறது.

இந்நிதியளிப்பானது சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஊடாக வழங்கப்படும். இது உலகளாவிய ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் தாரதரங்களைக் கடைப்பிடிக்கும் பங்காளர்களுக்கு வழங்கப்படும். நிதியளிப்பானது கணக்கீடு செய்யப்படுவதையும் உணவுப் பாதுகாப்பின்மையால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களை உதவி சென்றடைவதையும் இது உறுதி செய்கிறது.

மக்கள் எழுச்சி

இதனை இலக்காக் கொண்டு பாரிய அரசியல் பிரவேச இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு சகல கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தை அகற்றும் வரை இந்த மக்கள் போராட்டம் ஓயாது என்றார்.

தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நாட்டை கட்டியெழுப்புவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தொடர் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, இதன் முதற்கட்ட வேலைத்திட்டம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (28) ஆரம்பமானது.

அதன் பிரகாரம், நாவ லங்கா நிதகஸ் பக்ஷய, பிரஜைகள் முன்னணி, ஐக்கிய இடதுசாரி முன்னணி, எங்கள் மக்கள் சக்தி கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களின் இருக்கைகளைப் பாதுகாப்பது மட்டுமே அரசாங்கத்தின் அத்தியாவசிய தேவையாக இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது எனவும், இவ்வாறான நிலையில் நாட்டு மக்கள் பாரிய துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

செயற்பட முடியாத அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனவும் அதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டை கட்டியெழுப்பும் அரசாங்கம் அமைக்கப்படும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.

3 க்கு இல்லை 5 க்கு கூட்டுவோம்

மாணவர்களுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டார்.

எனினும், 05 நாள்களும் பாடசாலைகள் நடத்தப்படும் பகுதிகளில் மாத்திரம் எரிபொருளின் விலை அதிகரிப்பிற்கு அமைவாக போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய நெருக்கடி நிலையில் பெற்றோர்களும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதால், அவர்களுக்கு பாரிய சுமையை ஏற்படுத்தும் வகையில் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சங்கத்தின் தலைவர் மல்சிறி டி சில்வா சுட்டிக்காட்டினார்.

வெள்ளி முதல் பஸ் கட்டண உயர்வு

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் பஸ் சங்கங்களின் அதிகாரிகளுக்கு இடையில் நேற்று (28) பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கண்ணிவெடி அகற்றல் பணி ஓராண்டுக்கு நீடிப்பு

245 கனரக வாகனங்களுக் தெதிரான கண்ணிவெடிகளும், 26,019 வெடிக்கும் நிலையில் உள்ள எச்சங்களும், 164,115 சிறிய ஆயுத வெடிமருந்துகளும் கண்டு அழிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

13ஆவது வருடமாக டாஸ் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஜப்பான் அரசாங்கத்தால் நிதி உதவி வழங்கப்படுகின்றது. ஜப்பான் நாட்டின் நிதி உதவியால் மாத்திரம் 6.4 சதுர கிலோ மீற்றர் பரப்பு கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிகுதி பணிக்கான அடுத்த ஆண்டு நிதி உதவிக்கான ஒப்பந்தமே இரு தரப்பாலும் கையொப்பமிடப்பட்டது.

தொடர்ந்து மனித நேய பணியில் ஈடுபடும் குழுவினருடன் புகைப்படம் எடுக்கப்பட்டதுடன், செயற்பாடுகள் தொடர்பில் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர் களப்பணிகளை குறித்த குழுவினர் பார்வையிட்டதுடன், அகற்றப்பட்ட வெடிபொருட்களின் மாதிரிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

22ஆவது திருத்தத்தை சமர்ப்பிக்க அனுமதி

சட்டவரைஞரால் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலம் அரசியலமைப்புக்கு இணங்கியுள்ளதாக சட்டமா அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கம்பனிகளிடம் எரிபொருள் பெற ஏற்பாடு

தற்போது இலங்கை முகங்கொடுத்துள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடியால் நாட்டில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவது மிகவும் சவால்மிக்க பணியாகவுள்ளது. அதனையடுத்தே மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, முறைசார்ந்த பொறிமுறைகளைப் பின்பற்றி தெரிவு செய்யப்படும் எண்ணெய்க் கம்பனிகளுடன் நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கைக்கான எரிபொருள் இறக்குமதி செய்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் விநியோகித்தலுக்காக குறித்த கம்பனிகளுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

உயிர் பிரியும் முன்னர் விடுதலை கொடுங்கள்

உண்ணாவிரதம், கவனயீர்ப்புப் போராட்டம், தற்கொலை போராட்டம், தீக்குளிப்பு போராட்டம் என எமது உறவுகள் உயிரை பணயம் வைத்து போராடுகிறார்கள் என்றும் குடும்ப உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அவர்கள் உயிர் பிரியும் முன்னர் தயவு செய்து அவர்களுக்கான விடுதலை வழங்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தாழ்மையான வேண்டுகோளை விடுப்பதாக உண்ணாவிரத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

எம்.பிக்களை கொல்ல மக்கள் விரும்புகின்றனர்

ஊடகவியலாளர்கள் குழுவொன்றிடம் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தனது பாராளுமன்ற ஆட்சிக் காலத்தில் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு எம். பிக்கள் சிரமப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட எம்.பி ஒருவர் ஒரு நாள் அமர்வில் கலந்துகொள்வதற்கு 62,000 ரூபாயும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு 42,000 ரூபாயும் செலவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிப்போக்களில் எரிபொருள் கிடைப்பதில்லை

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் இருந்து தனியார் பஸ்கள் திட்டமிட்டபடி எரிபொருள் கிடைப்பதில்லை என்று தனியார் பஸ் சங்கப் பிரதிநிதிகள் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் நேற்று (28) முறைப்பாடு செய்தனர்.

போக்குவரத்து அமைச்சில் நேற்று (28) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது, தனியார் பஸ்களுக்கு தொடர்ச்சியாக எரிபொருளை பெற்றுக்கொள்ளும் முறையொன்றை வழங்குமாறு தனியார் பஸ் உரிமையாளர்கள், போக்குவரத்து அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன இவ்விடயம் குறித்து அறிவித்துள்ளார்.

வழக்கு தள்ளுபடிக்கு சட்டமா அதிபர் கோரிக்கை

ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானம் நீதிமன்றத்தின் எல்லையை விட்டு வெளியேறியதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யுமாறு, 2ஆவது பிரதிவாதியான விமான நிலைய சேவைகள் நிறுவன சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தன மன்றில் கோரிநின்றார்.

ஏரோஃப்ளோட் விமானங்கள் இலங்கைக்கான நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளதால், இந்த விவகாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான சாத்தியமான விரைவான திகதியை ரஷ்ய விமான நிறுவனம் சார்பில் ஆஜரான கலாநிதி லசந்த ஹெட்டியாராச்சி கோரினார்.

உண்மைகளை கருத்திற்கொண்ட கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்க இந்த வழக்கை ஜூலை 5 ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைத்தார்.

> **உண்மைகளை கருத்தில் கொண்ட வர்த்தக மேல் நீதிமன்றம், ஜூலை 5 ஆம் திகதி விசாரணைக்கு வழக்கை ஒத்திவைத்தது**

அயர்லாந்தில் உள்ள செலஸ்டியல் ஏவியேஷன் டிரேடிங் லிமிடெட் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, இலங்கையின் எல்லைக்குள் இருந்து ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானம் புறப்படுவதைத் தடுக்கும் தடை உத்தரவை ஜூன் 2 அன்று கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் பிறப்பித்தது.

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் எயர்லைன்ஸ் இரு தரப்பினருக்கு இடையேயான குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்கத் தவறியமைக்காக அயர்லாந்தில் உள்ள செலஸ்டியல் ஏவியேஷன் டிரேடிங் லிமிடெட் நிறுவனமானது இந்தத் தடை உத்தரவைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவ களஞ்சியசாலையில் இருந்து எரிபொருள் விநியோகம் நேற்று (28) காலை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் கையிருப்பு, முத்துராஜவெல முனையத்தில் இருந்து விநியோகிக்கப்படும் எனவும், பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்துமாறு நிரப்பு நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

நேற்றையதினம் (28) முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் (27) இரவு இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை சுகாதாரம், பாதுகாப்பு, மின்சாரம், கல்வி, உணவு விநியோகம், விவசாயம் மற்றும் ஏற்றுமதி துறைகளுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்றும் இந்த காலப்பகுதியில் தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் அறிவித்தார்.

ரயில் கட்டணங்களை திருத்த அனுமதி

ஆனாலும், அண்மைக் காலங்களில் எரிபொருள் விலையில் ஏற்பட்ட அதிகரிப்புகளால் திணைக்களத்தின் மீண்டெழும் நட்டங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

திருப்திகரமான ரயில் சேவைகளை மேற்கொண்டு செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் திணைக்களம் ஈட்டுகின்ற வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய, 05 வருடங்களுக்கும் மேலாக திருத்தம் செய்யப்படாத ரயில் கட்டணம், 14 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாத சரக்குகள் போக்குவரத்து மற்றும் தபால் போக்குவரத்து நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சரக்குகள் போக்குவரத்துக்காக அறவிடப்படும் ரயில் கட்டணங்கள் திருத்தம் செய்யப்படவுள்ளன.

அதன்படி, கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பெண் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான

குடும்பப் பின்னணி அறிக்கை நீக்கம்

இரண்டு (02) வயதோ அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள பெண்கள் வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது கட்டாயமாகக் குடும்பப் பின்னணி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனும் தேவையிலிருந்து விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர், அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வீட்டுப் பணிகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் புலம்பெயர் பெண் தொழிலாளர்களுக்கு 05 வயதுக்குக் குறைவான பிள்ளைகள் இன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் தற்போது நிலவுகின்ற 'குடும்பப் பின்னணி அறிக்கை' சமர்ப்பிக்கப்பட வேண்டிய கட்டாயத் தேவை இருக்கிறது.

இதனால் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதாக பெண்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச அறிக்கைகள் பலவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறே ஒருசில சந்தர்ப்பங்களில் குறித்த அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருப்பினும், ஒருசில அலுவலர்கள் பல்வேறு காரணங்களால் குறித்த அறிக்கையைத் தாமதப்படுத்துவதால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக செல்வதற்கு எதிர்பார்க்கின்ற பெண்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையை சமர்ப்பிப்பதற்குத் தகைமையற்ற ஒருசில பெண்கள், வேறு சட்டவிரோத வழிமுறைகளைக் கையாண்டு எந்தவொரு கண்காணிப்புகளும் இன்றி வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



ஆஸி செல்ல முயன்ற 47 பேர் கைது

கைதானோர் எண்ணிக்கை 500ஆக உயர்வு

நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமாக நாட்டை விட்டு அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 47 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (27) இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே, 47 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆட்கடத்தல் நடவடிக்கையுடன் தொடர்புடைய ஐவரும் இதில் அடங்குவதுடன் 34 ஆண்கள், 6 பெண்கள், 7 சிறுவர்களும் இதன்போது கைதுசெய்யப்பட்டு கடற்படையினரின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 1 தொடக்கம் 50 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வென்னப்புவ, நாத்தாண்டியா, சிலாபம், மட்டகளப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டுச் சட்டத்தால் நாட்டை ஆள முடியாது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

ஒரு நாட்டை காட்டுச் சட்டத்தால் ஆள முடியாது என்றும் அதற்காக ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல தரப்பு பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (27) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியான வெற்றிக்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயுள்ள பரப்புகளிலும் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இதன் ஊடாக மக்களுக்கான வெற்றிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக, 21 ஆவது திருத்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் ஊடாக ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதே தமது ஒரே நோக்கமாகும் என்றார்.

இலங்கை அமைதி காக்கும் படையினரை

இலங்கை தூதுவர் பார்வையிட்டார்

லெபனானுக்கான இலங்கை தூதுவர் ஷானி கல்யானரத்ன கருணாரத்ன, லெபனானில் உள்ள ப்ளூ லைனில் உள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையின் தலைமையகத்தில் தூதுவர் மற்றும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அரோல்டோ லாசாரோவை மரியாதை நிமித்தமாக 2022 ஜூன் 21 ஆம் திகதி சந்தித்தார்.

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையில் இலங்கைப் படைகளை அதிகரித்தல் உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் குறித்து அவ்விருவரும் கலந்துரையாடினர்.

இலங்கை படையினரின் சிறந்த நிபுணத்துவத்திற்கே மதிப்பளிக்கப்படுவதாகவும், கடந்த 11 வருடங்களாக லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படைக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்காக நன்றி தெரிவிப்பதாகவும் படைத் தளபதி தெரிவித்தார்.

வீரமாநகரில் நூதன கொள்ளை

■ தீஷான் அஹமட்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வீரமாநகர் கிராமத்தில் வீடொன்றின் ஜன்னலை உடைத்துக்கொண்டு, திங்கட்கிழமை (27) நள்ளிரவு உள்நுழைந்த திருடன், பணம், நகை மற்றும் பெறுமதியான பொருட்கள் எவற்றையும் திருடாது, வெற்று எரிவாயு சிலிண்டரை மட்டும் திருடிச் சென்றுள்ளான்.

அண்மைய நாள்களில் இது போன்ற மூன்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வீரமாநகர், உப்பூறல் பகுதிகளில் வசிக்கும் சிலர் வெற்றுச் சிலிண்டர்களுக்கு பத்தாயிரம் தொடக்கம் இருபத்தைந்தாயிரம் வரை கொடுத்துக் கொள்வனவு செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரவுப் பிரச்சினைகள் காரணமாக சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடுகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காலி விளையாட்டு அரங்கை

சுற்றி காத்திருக்கும் காஸ் சிலிண்டர்கள்

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டிருக்கும் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி, காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று (29) ஆரம்பமாகவிருக்கிறது.

இந்நிலையில் அந்த மைதானத்தை சுற்றி, மஞ்சள் மற்றும் நீல நிறங்களிலான சமையல் எரிவாயு வெற்று சிலிண்டர்கள் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலிண்டர்கள் யாவும் 25 நாள்களுக்கும் மேலாக அங்கு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவைத் தீர்மானங்கள் சில..

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், திங்கட்கிழமை (27) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தின் போது, எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில் சில...

01. இலங்கைக்கான வேலைத்திட்டம்

'ஜனநாயக நல்லாட்சி மற்றும் ஒருமைப்பாட்டுக்கான ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்' மற்றும் 'காப்பீட்டுப் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தும் வேலைத்திட்டம்' ஆகியவற்றுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையே 2011 ஆம் ஆண்டில் இரண்டு ஒப்பந்தங்கள் கையொப்பமிட்டிருந்தன.

அதற்கமைய, குறித்த இரண்டு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வினைதிறனான ஜனநாயக ஆட்சி, காப்பீட்டு சந்தை அடிப்படையிலான விருத்தி, இடர்கள் மற்றும் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கத் தேவையான வளங்களைப் பலப்படுத்தல் போன்ற துறைகளில் அடிப்படைக் கவனத்தைச் செலுத்தி 'ஜனநாயக, சுபீட்சமான மற்றும் இடர்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய இயலுமை கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்' எனும் பெயரில் புதிய வேலைத்திட்டமொன்றை 2026 ஆம் ஆண்டு வரைக்கும் நடைமுறைப்படுத்தப்பட தீர்மானித்துள்ளது.

57 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

02 தேசிய புரட்சி – 2022

தற்போது நாட்டில் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காண்பதற்காக விவசாய அமைச்சின் தலைமையின் கீழ் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு உள்ளிட்ட ஏனைய அமைச்சுகளையும் இணைத்துக் கொண்டு அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புகளுடன் நாடளாவிய ரீதியில் முறைசார் மற்றும் துரிதமாக உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பௌத்த விகாரைகள் மற்றும் புனித பூமி, தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், இந்துக் கோவில்களுக்குச் சொந்தமாகவுள்ளதும் பயிரிடக் கூடியதுமான 250,000 ஹெக்டேயர் காணிகளை பயிர்ச்செய்கைகளுக்காகப் பயன்படுத்தி 'ஒன்றுபட்டு பயிரிடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்- உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய புரட்சி - 2022' எனும் பெயரிலான குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

03. சட்டத்தைத் திருத்தம் செய்தல்

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு பிள்ளையும் சிறுவர் எனப் பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சமவாயத்திற்கு இணங்கியொழுகி குறித்த ஏற்பாடுகளை உட்சேர்த்து சிறுவர்கள் மற்றும் இளையவர் தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

04. புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்

பாதுகாப்பு மற்றும் காப்பீடுகள் தேவையான பிள்ளைகள் தொடர்பாக வழக்கு விசாரணைகளுக்கோ அல்லது சட்டத்தை மீறுகின்ற பிள்ளையொருவருக்கு எதிராக வழக்கு விசாரணைக்காக நீதிமுறை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக வேறு விதத்தில் நீதிமுறை அதிகாரத்தை செயற்படுத்தும் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சிறுவர் (நீதிமுறைப் பாதுகாப்பு) தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2015 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்திற்காக இரண்டு விசேட நிபுணத்துவக் குழுக்கள் மூலம் ஆராய்ந்து மேலும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்தில் குறித்த முன்மொழிவுகளையும் உட்சேர்த்து இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

05. சட்டத்தை திருத்தம் செய்தல்

நொத்தாரிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் மரணசாதன கட்டளைச் சட்டங்களுக்காக மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள திருத்தங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்திற்கு ஒருசில விளைவாய்ந்த தன்மையுடைய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையைக் கருத்தில் கொண்டு, அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

06. அற்றோனித்தத்துவ உரிமப்பத்திரம்

போலியாகவும் மற்றும் சட்ட விரோதமாகவும் அற்றோனித்தத்துவ உரிமப்பத்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிச் செயற்பாடுகளைக் குறைப்பதற்காக அற்றோனித்தத்துவ உரிமப்பத்திர கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

07. நீதிமன்றத்தை அவமதித்தல் விவகாரம்

இலங்கையில் நீதிமன்றத்தை அவமதித்தல் குற்றம், பொருள்கோடல் செய்யப்படாமையால் அவ்வாறான வழக்குகளை விசாரணை செய்வதற்கும் மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கும் தெளிவானதும் ஒரே விதமானதுமான நடபடிமுறையொன்று தற்போது பின்பற்றப்படுவதில்லை. அதனால் நீதி வழங்கும் செயன்முறையில் தலையிடும் மட்டுப்பாடுகள் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் கீழ் காணப்படும் மட்டுப்பாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

அதேபோல், நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக அண்மைக்காலத்தில் மோசமாக விமர்சனத்திற்குள்ளாகிய வழக்குகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளும் போது அதுதொடர்பான சட்டத்தை மீண்டும் கவனத்திலெடுத்தல் உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, பொருத்தமான சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அதுபற்றிய விடயங்களை ஆராய்ந்து இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அடிப்படைச் சட்டமூலத்திற்கமைய சட்டமொன்றை வகுப்பதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

08. திருத்தங்களை அறிமுகப்படுத்தல்

காணி மோசடிகள் தொடர்பாக சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் புதிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நொத்தாரிஸ் ஆலோசனைக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்தின் பிரகாரம், பதிவாளர் நாயகத்தின் கருத்துகளையும் கேட்டறிந்து சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

09. புதிய விநியோகத்தர்களை அடையாளம் காணல்

இலங்கைக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயும் விமான சேவைகளின் தொழிற்பாடுகளுக்காக நாளாந்தம் 1.2 மில்லியன் லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதுடன், நாட்டில் தற்போதைய நிலைமையின் கீழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விமானக் கம்பனிகளின் தொழிற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்ச எரிபொருள் அளவைக் கூட விநியோகிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இயலாது போயுள்ளது.

இந்நிலைமையின் கீழ் விமான சேவை தொழிற்பாடுகளை முடக்கப்படாமல் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் களஞ்சியக்காரர்களுக்கு ஜெட் ஏ-1 விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கு அனுமதி வழங்குவதற்கான அமைச்சரவை யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் தமிழ்Mirror பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள் பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX

முன்னாள் போராளிகளை

தொந்தரவு செய்யாதீர்

மாபியாக்களை கண்டுபிடிக்குமாறு செல்வம் கோரிக்கை

■ க. அகரன்

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை தொந்தரவு செய்யாமல் எரிபொருளை பதுக்கும் மாபியாக்களை கண்டுபிடிப்பதற்கு புலனாய்வு பிரிவினர் முன்வரவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நேற்று (28) கோரிக்கை விடுத்தார்.

அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பானது சிறுபிள்ளைத்தனமானது. இதனால் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் உட்பட பலதரப்பினரும் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

குளிரூட்டப்பட்ட அறையில் இருக்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தன, சாதாரண மக்கள் வரிசையில் நிற்கும் பரிதாபத்தை உணர்ந்திருப்பாரோ என்று தெரியவில்லை.

அதிலும், பெண்கள் இந்த விடயத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று ஒருநேர சாப்பாட்டுடன் வாழ்வை கழிக்கும் அவலநிலை பலருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, அந்த மக்களின் பரிதாப நிலையை அறியாது, அமைச்சர் பந்துல இவ்வாறு அறிவித்திருப்பது ஏற்க முடியாத கருத்தாகவே உள்ளது. இந்த நடைமுறையை அவர் உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

இன்று, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இந்த நேரத்தில், எரிபொருளை கோரி ரஷ்யாவுக்கும் கட்டாருக்கும் செல்லும் அமைச்சர்கள் அந்த முஸ்தீபை முன்னமே செய்திருக்கவேண்டும்.

களவு செய்பவர்களுக்கும் பதுக்குபவர்களுக்கும் தாராளமாக எரிபொருள் கிடைக்கிறது. அவர்களின் பின் செல்லாத புலனாய்வாளர்கள், புனர்வாழ்வு பெற்ற விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை இலக்கு வைத்து ஒவ்வொருநாளும் சென்று விசாரணை மேற்கொள்கின்றனர் என்றார்.

டியூட்டரிகளுக்கும் சாப்பு சட்டம் அமல்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் (டியூட்டரி) க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்ற நாள்களின் எண்ணிக்கையை மூன்று தினங்களாக மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கல்முனை மாநகர சபையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (27) மாலை, மேயர் ஏ.எம். றகீப் தலைமையில் நடைபெற்ற டியூட்டரி நிர்வாகிகளுடனான கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் ஒவ்வொரு நாளும் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பில் இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கான தட்டுப்பாடு, ஓட்டோக்களுக்கான அதிகரித்த கட்டணம், தனிப்பட்ட வாகனங்களாயினும் எரிபொருள் கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களால் குறிப்பிட்ட சில காலத்துக்கு டியூட்டரிகளை மூடி, வகுப்புகளை இடைநிறுத்த வேண்டும் என்று பெற்றோர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

நாட்டு நிலைமை விரைவில் சீராகி விடும் என்ற நிச்சயம் இல்லாத நிலையில், வகுப்புகளை இடைநிறுத்துவதானது மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், பாடத்திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலைமை ஏற்படும் எனவும் சில டியூட்டரி நிர்வாகிகள் இதன்போது எடுத்துரைத்தனர்.

இந்நிலையில், வகுப்புகளை இடைநிறுத்தாமலும் வகுப்புகளின் எண்ணிக்கையை குறைக்காமலும் மாணவர்கள் வகுப்புகளுக்கு வருகின்ற நாள்களை குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்ட தீர்மானம் டியூட்டரி நிர்வாகிகளின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன்படி, தற்போது 06 அல்லது 07 நாள்கள் வகுப்புகளில் பங்குபற்றுகின்ற ஒரு மாணவர், ஏதாவது மூன்று நாள்கள் மாத்திரம் வகுப்புகளுக்கு சமூகமளித்து, உரிய பாட வேளைகளை பூர்த்தி செய்யும் வகையில், இடைவேளை அடங்கலாக நேரசூசியை தயாரித்து, நடைமுறைத்துவது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, கல்முனை மாநகராட்சி எல்லைக்குள் சாப்புச் சட்டத்தின் பிரகாரம் வெள்ளிக்கிழமைகளில் எந்தவொரு தனியார் கல்வி நிலையமும் இயங்க முடியாது என்ற அறிவுறுத்தல் மேயரால் இதன்போது வழங்கப்பட்டதுடன், இதனை மீறி வெள்ளிக்கிழமைகளில் ஏதாவது தனியார் கல்வி நிலையம் இயங்குமாயின், அதன் நிர்வாகிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

யாழில் மாயமான சிறுமி கிளியில் மீட்பு

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாக கூறப்படும் சிறுமி, கிளிநொச்சிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்ட வீதியில் வசிக்கும் சிறுமி, யாழ்ப்பான நகரப் பகுதிக்கு தனது தேவைக்காக வெள்ளிக்கிழமை (24) சென்றிருந்தவேளை, கும்பலொன்றால் கடத்திச் செல்லப்பட்டு, கிளிநொச்சியில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என சிறுமியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தாம் முறைப்பாடு செய்த போதும், பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனால், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்தனர்.

உபஉணவு பயிர் செய்கையை வெறுக்கும் விவசாயிகள்

■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உபஉணவு பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதில் விவசாயிகள் அக்கறை செலுத்துவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயிகளால் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு உப உணவுப் பயிர்ச் செய்கைகள், கால்நடைகளால் அழிக்கப்படுகின்றன.

ஆகவே, உப உணவுப் பயிர்ச் செய்கை காலங்களில் வேலி அடைப்பதற்கு கூடுதலான நிதி தேவைப்படுதல், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, இரசாயன உரம் கிடைக்காமை, சந்தை வாய்ப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களால் உப உணவுப் பயிர்ச் செய்கையில் இருந்து விவசாயிகள் விலகி வருகின்றனர்.

கடந்த காலங்களில், சிறு போக நெற்செய்கை காலங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் கூடுதலாக ஈடுபட்டனர். இதன் போது அறுவடை செய்யப்பட்ட உளுந்து, எள்ளு போன்ற தானிய வகைகளின் விலைகள் குறைவடைந்ததன் காரணமாக, இப்பயிர்ச் செய்கையில் இருந்து விவசாயிகள் ஒதுங்கும் நிலை காணப்படுகின்றது.

தற்போதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளில் 2,000 கிலோ கிராம் வரையான உளுந்து, எள்ளு என்பன நியாய விலை கிடைக்காததன் காரணமாக சேமிக்கப்பட்ட நிலையிலேயே தானியங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில், குளங்களில் நீர் உள்ள போதிலும் உப உணவுப் பயிர்ச் செய்கையில் இருந்து விவசாயிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒதுங்கி வருகின்றமையை காணமுடிகின்றது.

நூதனமான முறையில் பெற்றோல் திருட்டு

■ எம்.முபாரக்

திருகோணமலை, வினாயகபுரம் பகுதியில் கும்பல் ஒன்று வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிளில் பெற்றோலை திருடும் காட்சி, அங்கிருந்த சி.சி.ரி.வி பாதுகாப்பு கமெராவில் பதிவாகியிருந்தது.

நான்கு பேரைக் கொண்ட குழுவில், மூன்று பேர் வீதிகளில் காவல் பணிகளில் ஈடுபட, ஒருவர் மட்டும் மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடுகின்ற சம்பவம், விநாயகபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற இன்றைய சூழலில், பலர் எரிபொருளை பதுக்கும் நடவடிக்கைகளிலும், அதிகமான விலைக்கு விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளிலும், தரித்து நிற்கின்ற வாகனங்களில் எரிபொருளை திருடுகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

குறிப்பாக போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ள இளைஞர்கள், இதுபோன்ற திருட்டுச் சம்பவத்தில் அதிகம் ஈடுபட்டுவருவதாக தெரிய வருகின்றது. எனவே, மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வீட்டுத் தோட்ட பயிர் செய்கை மும்முரம்

■ எம்.முபாரக்

உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இளைஞர் கழகங்களுக்கிடையிலான வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை நடவடிக்கை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

திருகோணமலை, பீலியடி பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள கத்தரி, வெண்டி, மிளகாய், மரவள்ளி போன்ற பயிர்கள் சிறப்பாக காணப்படுகின்றன. இவற்றின் பராமரிப்பு நடவடிக்கைகள், ஆலோசனை வழிகாட்டல்கள் என்பவற்றை பிரதேச வெளிக்கள விவசாய அதிகாரிகள், இளைஞர் சேவை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செய்கைகள் கந்தளாய், கிண்ணியா, வெருகல், மூதூர் போன்ற பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குரங்குகளை கட்டுப்படுத்துங்கள்

■ நடராஜா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் விவசாயச் செய்கைக்கு பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்ற குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவு நிதி செலவழித்து உப உணவு மரக்கறி, பழச் செய்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வரும் நிலையில், மாவட்டத்தில் அதிகரித்துள்ள குரங்குகளால் பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன.

கிளிநொச்சியில் இயங்குகின்ற வன ஜீவராசிகள் திணைக்களம், குரங்குகளைக் கட்டுப்படுத்துவதில் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் காரணமாக பயிர்ச் செய்கைகள் குரங்குகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

கமநல சேவை நிலையங்கள், வாயு துப்பாக்கிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவில்லை. கமக்கார அமைப்புகளிடம் உள்ள நிதியை குரங்குகள், யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டும் எனப் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை, கிளிநொச்சி நகரத்தில் குரங்குகளால் பாடசாலைகள், அரச திணைக்களங்கள் என்பவற்றுக்கும் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சரவணபவன் மீது தாக்குதல் முயற்சி;

சந்தேகநபருக்கு விளக்கமறியல்

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயன்ற சந்தேகநபரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அரச கடமைக்கு இடையூறு விளைவித்தமை, அரச அதிகாரியைத் தாக்க முற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கான எரிபொருட்கள் 23 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், நபரொருவரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தார்.

3,000 லீற்றர் டீசல் மீட்பு

■ க. அகரன்

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3,000 லீற்றர் அளவிலான 15 பெரல் டீசல், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் விசேட பிரிவினர், நெளுக்குளம் பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்கள் இணைந்து, இரும்பகம் ஒன்றில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது 15 பெரல்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசலை மீட்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடற்படையினர் மூவர் விபத்தில் படுகாயம்

■ எம்.முபாரக்

திருகோணமலை - ஹபரண பிரதான வீதியின் கித்துல் ஊற்று என்னுமிடத்தில், கடற்படையினர் சென்ற கெப் வாகானம் டிப்பருடன் மோதியதில் மூன்று கடற்படை வீரர்கள் படுகாயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் திங்கட்கிழமை (27) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து- திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படை கெப் வாகனம், கந்தளாய், கித்துல் ஊற்று என்னுமிடத்தில் முன்பாக சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த கடற்படை வீரர் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இருதயநாதர் தேவாலய பெருவிழா

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் தொன்மை வாய்ந்த கத்தோலிக்க தேவாலயங்களில் ஒன்றாக திகழ்ந்துவரும் இருதயபுரம் திருஇருதயநாதர் தேவாலய வருடாந்த பெருவிழா (26) திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவடைந்துள்ளது. தேவாலய பங்குத்தந்தை அருட்பணி அலெக்ஸ் றொபர்ட் அடிகளார் தலைமையில், பங்குமக்கள் கூழ 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய வருடாந்த திருவிழாவில், நவநாள் காலங்களில் தினமும் திருச்செபமாலையும், ஆராதனையும் ஒப்புக்கொடுக்கப்பட்டு, சனிக்கிழமை (25) வெஸ்பர் ஆராதனை இடம்பெற்று, ஞாயிற்றுக்கிமை (26) மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, அத்திருப்பலியில் முதல் நன்மை, உறுதிபூசுதல் ஆகிய அருளடையாளங்கள் வழங்கப்பட்டன.

நெருக்கடியைத் தீர்க்க ஊவாவில் ஆலோசனை

■ ராமு தனராஜா

தற்போதைய எரிபொருள் நெருக்கடிகளுக்கு மத்தியில், கல்வி மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில் தலைமையில் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, தனியார் பயணிகள் பொது போக்குவரத்து சேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தனியார் பஸ்கள், சிசுசரிய பஸ்கள் என்பவற்றுக்கு எவ்வித தடையுமின்றி எரிபொருள் வழங்கப்பட வேண்டிய முறை தொடர்பில், ஆளுநர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியதுடன் அதற்கான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மாகாண பிரதான செயலாளரால் அங்கிகரிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்கும் இலகுரக வாகனங்கள், பாடசாலை போக்குவரத்து வான்களுக்கு எரிபொருள் வழங்கும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள், பொதுப் போக்குவரத்தைத் தடங்களின்றி தொடரும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் ஊடாக, முறைகேடுகள் செய்து பயனைப் பெற முயற்சிக்கும் நபர்களுக்கு எரிபொருள் வழங்குவதை இடைநிறுத்தவும் ஆளுநர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் ஊவா மாகாண பிரதான செயலாளர் பீ.பி விஜயரத்ன, ஆளுநரின் செயலாளர் எம். எம். விஜயநாயக, பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) ஆர்.எச்.சி பிரியந்தி, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சி. அத்தரவத்த, கூட்டுறவு எரிபொருள் நிலைய மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

அதிக விலைக்கு டீசல் விற்றவர் சிக்கினார்

■ ராமு தனராஜா

பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெமேரியா பகுதியில், வாகனம் பழுதுபார்க்கும் இடமொன்றில், அதிக விலைக்கு டீசலை விற்றவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பசறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து வாகனம் பழுதுபார்க்கும் இடத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, 40 வயதான நபர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அவரிடமிருந்து 60 லீற்றர் டீசலையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபரை பசறை நீதிமன்றில் 30ஆம் திகதி ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தூர பகுதிகளுக்கும்

எரிவாயுவை விநியோகிக்கவும்

இராதா எம்.பி கோரிக்கை

■ எஸ். கணேசன்

நுவரெலியா மாவட்டத்தில் தூர பகுதிகளுக்கும் முறையாக சமையல் எரிவாயுவை விநியோகிக்குமாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

கொட்டகலை பகுதிக்கு நேற்று (28) வருகை தந்த அவர், அங்குள்ள 'லாப் கேஸ்' முகவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

சமையல் எரிவாயுவை முறையாக விநியோகிப்பதில் உள்ள நெருக்கடி நிலை குறித்து கேட்டறிந்த அவர், மக்கள் தரப்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

நகர் பகுதிகளுக்கு நெருக்கடிக்கு மத்தியில் எரிவாயு விநியோகிக்கப்பட்டாலும், தூர இடங்களில் உள்ள தோட்ட பகுதிகளுக்கு வருவதில்லை. எனவே , இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

கோடரியால் தாக்கி மனைவியை

கொன்றவருக்கு விளக்கமறியல்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலிபண்ட் மேல் பிரிவு தோட்டத்தில், மனைவியை கோடரியால் தாக்கி படுகொலை செய்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொலை குற்றத்தை ஒப்புக்கொண்ட சந்தேகநபரை, அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நுவரெலியா மாவட்ட நீதவான் திலின எம்.பீரிஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த மாதம் 25ஆம் திகதி இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் 26 வயதான சுப்பிரமணியம் சத்தியவாணி என்பவரே படுகொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து, தனது பிள்ளைகளுடன் சரணடைந்த சந்தேகநபரான அப்பெண்ணின் கணவரை, நுவரெலியா பொலிஸார், நுவரெலியா நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் (27) மாலை ஆஜர் செய்தனர்.

பிள்ளைகள் இருவரையும் அரசாங்க குழந்தைகள் காப்பகத்திற்கு அனுப்பி வைக்க நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது. எனினும், உயிரிழந்த பெண்ணுடைய தாயின் பராமரிப்பில் பிள்ளைகளை பராமரிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நோய் பரிசோதனை கட்டணங்கள்

மும்மடங்காக அதிகரிப்பு

பரிசோதனைகளைத் தவிர்க்கும் நோயாளர்கள்

■ சேஹன் செனவிரத்ன

பல்வேறு நோய்கள் குறித்து அறிந்து கொள்வதற்காக செய்யப்படும் இரத்த மாதிரி சோதனைகள் உள்ளிட்ட நோய் சோதனைகளுக்கான கட்டணங்கள், மூன்று மடங்குகாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படும் பரிசோதனைகளை சிலர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இதுவரை நோயாளிகளின் முழுமையான இரத்த பரிசோதனைக்கு அறவிடப்பட்டு வந்த 250 ரூபாய் கட்டணம், 600 ரூபாய் தொடக்கம் 700 ரூபாய் வரை தனியார் பரிசோதனை கூடங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக டெங்கு நோயைக் கண்டுபிடிப்பதற்காக இரத்தமாதிரியை பரிசோதிக்குமாறு எவரேனும் வைத்தியர் ஒருவர் பரிந்துரைத்தால், தாமதிக்காமல் அந்தப் பரிசோதனையை செய்யுமாறு கண்டி நகர பிரதான வைத்திய அதிகாரி பசன் ஜயசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த இரத்த மாதிரி பரிசோதனையை தாமதப்படுத்துவதால், நோயாளியின் நிலைமையும் மோசமடையும் நிலை ஏற்படும். அவ்வாறான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது, நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடானது, நோயாளிக்கு ஆபத்தான நிலையை உருவாக்கும் என்றார்.

அத்தியாவசிய தேவைகளுக்கு

ஹட்டனில் டீசல்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 6,600 லீற்றர் எரிபொருள் நேற்று முன்தினம் (27) கிடைக்கப்பெற்றதுடன், இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ், குறித்த டீசல் அத்தியாவசிய தேவையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இதன்போது அத்தியாவசிய தேவையற்ற வாகனங்களுக்கும் மட்டுப்படுத்தலுடன் நேற்று (28) டீசல் விநியோகிக்கப்பட்டது.

முன்னதாக இராணுவத்தினரால் வழங்கப்பட்ட டோக்கன்களுக்கு அமையவே டீசல் வழங்கப்பட்டதுடன், சாதாரண வாகனங்களுக்கு மட்டுப்படுத்தலுடனும் அத்தியாவசிய வாகனங்களுக்கு தாரளமாகவும் டீசல் விநியோகிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக, இராணுவத்தினருக்கு ஹட்டன் பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இதேவேளை, ஹட்டன் டிப்போ மூலம் குறுகிய தூர சேவைகளுக்கு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

கூட்டுறவுக் கடைகள் ஊடாக தோட்டங்களுக்கு

உணவுப் பொருட்களை விநியோகிக்க வேண்டும்

■ செ.தி பெருமாள்

தோட்டங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள் ஊடாக, தொழிலாளர்களுக்கு நியாய விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கும் தோட்ட நிர்வாகங்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் கே. குழந்தைவேல் ரவி குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

தோட்டங்கள் தோறும் ஒரு காலத்தில் கூட்டுறவு கடைகள் இயங்கி வந்துள்ளன. அவற்றுக்கு தோட்ட முகாமையாளர்களே பொறுப்பாக இருந்து வந்துள்ளார்கள். ஆனால், இடைப்பட்ட காலத்தில் ஒரு சில தோட்டங்களைத் தவிர ஏனைய தோட்டங்களில் கூட்டுறவுக் கடைகள் முறையாக இயங்குவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

அதேநேரம், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் (TRUST) கட்டட நிர்மாணப் பணிகள் முதலான விடயங்கள் மாத்திரம், கூட்டுறவுக் கடைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டப்படுவதில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே, தோட்டங்கள் தோறும் கூட்டுறவுக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டு, முறையாக நிர்வகிக்கப்படும் பட்சத்தில் இன்றைய பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரித்துள்ள காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் குறைந்த விலையில் உலர் உணவு முதலான அத்தியாவசியப் பொருட்களை தோட்டங்களிலேயே சிரமமின்றி பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன், சகல தோட்டங்களிலும் கூட்டுறவுக் கடைகள் இயங்குவதற்கு தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும். தோட்டத் தொழிலாளர்களை கூட்டுறவுக் கடைகளில் அங்கத்தவர்களாக சேர்க்க வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

அரச அதிகாரிகளுக்கான

ஒரு நாள் செயலமர்வு

■ என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கான ஒரு நாள் செயலமர்வு, நேற்று (28) கேகாலை அம்ப செவன ஹோட்டலில் நடைபெற்றது.

இச்செயலமர்வில், சிறுவர் உரிமை அபிவிருத்தி அதிகாரிகள், வனிதா அபிவிருத்தி அதிகாரிகள், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அதிகாரிகள் உள்ளிட்ட பல நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்குபற்றினர்.

இதன்போது, மக்கள் பிரதிநிதியின் பொறுப்பு, அடிப்படை உரிமைகள், அரச அதிகாரிகள் கடமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

ஆர்ப்பாட்டங்கள்...

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக மாத்தளை, நுவரெலியா ஆகிய இடங்களில் நேற்று (28) எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(கேதீஸ், மஹேஸ் கீர்த்திரத்ன)

கர்ப்பிணிகளுக்கான

போஷாக்கு கூப்பனை மீண்டும் வழங்கவும்

■ நிலமகம் பிரசாந்த்

கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்ட போஷாக்கு கூப்பன் இடைநிறுத்தப்பட்டு உள்ளமை, எதிர்கால சந்ததியினரையே பாதிக்க செய்யும் எனச் சுட்டிக்காட்டியுள்ள மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளரும் கொட்டகலை வர்த்தக சங்கத்தின் தலைவருமான புஸ்பா விஸ்வநாதன், கர்ப்பிணி தாய்மார்களுக்கான போஷாக்கு கூப்பனை வழங்க அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், கர்ப்பிணிகள் போஷாக்கான உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறான நேரத்தில், இப்போஷாக்கு கூப்பனை இடைநிறுத்தியுள்ளமை பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமானால், போஷாக்கு அற்ற குழந்தைகள் பிறப்பதற்கான சூழல் உருவாகும். இதனால் எதிர்காலத்தில் பிறக்கும் பிள்ளைகளின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட அதிகமாகவே வாய்ப்பு உள்ளது.

எனவே, இடைநிறுத்தப்பட்ட கர்ப்பிணிகளுக்கான மாதந்தோறும் வழங்கும் போஷாக்கு கூப்பனை வழங்க, அரசாங்கம் துரித நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

நான்காவது தூணையும் கல்வியையும் உமிழ்ந்த ‘அத்தியாவசியம்’

அரசாங்கத்தால் விடுக்கப்படும் அறிவிப்புகளைப் கேட்குமிடத்து, தாம் எந்தப் பிரிவுக்குள் இருக்கின்றோம் என்பதை தேடுவதிலேயே பலரும் அரைநாளை வீணடித்துவிடுகின்றனர். அந்தளவுக்கு தெளிவு இல்லாமலும், பல தரப்பினரைப் பாதிக்கும் வகையிலும், குளறுபடியான அறிவிப்புகளையே விடுக்கின்றது.

ஜூலை 10 ஆம் திகதிவரை அத்தியாவசிய சேவைகளுக்கும் தேவைகளுக்கும் மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படுமென இரவோடு இரவாக அறிவித்து, அதனை, நேற்று (28) காலைமுதல் அமல்படுத்தி வருகின்றது. இந்த அறிவிப்பால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவை இலவச சேவைகளாகும். அச்சேவைகள் சகலருக்கும் சமமானதாகவே இருக்க வேண்டும். எனினும், நகர்புறங்களில் பாடசாலைகளை இழுத்து மூடிவிட்டும், கிராமங்கள், தோட்டப்புறங்கள் மட்டும் அண்மையிலிருக்கும் பாடசாலைகளுக்குச் செல்வோருக்கு, பாடசாலைகளின் கதவுகளை திறந்துவைத்துள்ளது. இது பாரபட்சமான நடவடிக்கையாகும்.

திறந்திருக்கும் பாடசாலைகளுக்கு தூர பிரதேசங்களில் இருந்தும் வாகனங்களிலும் செல்லவேண்டிய அதிபர், ஆசிரியர்களால் செல்லமுடியுமா? ஆக, ‘அத்தியாவசியம்’ என்பது தொடர்பில் போதியளவான தெளிவின்மையே காணப்பகின்றது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து, ஏதாவது ஒரு பிரிவு வேலைநிறுத்தத்தில் குதிக்க போவதாக அறிவிக்குமாயின், அந்தப் பிரிவால் பொதுமக்களின் நடவடிக்கைகள், சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுமாயின், அந்தச் சேவையை, ‘அத்தியாவசிய சேவை’ எனக் குறிப்பிட்டு, உடனடியாகவே அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுவிடும்.

அவ்வாறே, பல துறைகளும் சேவைகளும் ‘அத்தியாவசிய சேவை’க்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்ற தீர்மானம், எவ்வாறான அளவுகோலின் அடிப்படையில் எடுக்கப்பட்டது என்பது கேள்விக்குறியாகும்.

ஒவ்வொருவருக்கும் பல்வேறு வகையிலான அத்தியாவசிய தேவைகள் இருக்கும் என்பதை, அரசாங்கம் கடுமையாக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். எனினும், கல்வித்துறையையும் ஊடகத்தையும் அத்தியாவசிய சேவைக்குள்ளிருந்து அரசாங்கம் உமிழ்ந்துவிட்டது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறையானது மக்களுக்கும் அரசாங்கம், அரசுக்கு இடையில் தகவல்களை பரிமாறும் ஒரு பாலமாகும். அந்தத்துறை முடங்குமாயின், எந்தவொரு தகவலும் மக்களைச் சென்றடையாது. மக்களின் கோரிக்கைகளும் அரசாங்கத்தின் செவிகளுக்குச் செல்லாது.

இதற்கிடையே, எரிபொருள் இன்மையால் முழுநாடும் முடக்கப்படும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையாக செயலிழந்து கொண்டிருக்கிறது. இதில் கல்விச் செயற்பாடுகள் மௌனமாகி விட்டன. இணையவழி கல்விக்குள் மாணவர்களை மீண்டும் உள்ளீர்ப்பது குதிரை கொம்பாகவே இருக்கிறது.

கொரோனா காலத்தில் ஆர்வத்துடன் இணையவழியில் கற்றவர்கள், தொலைபேசி கட்டணம், மின்சார துண்டிப்பு என்பவற்றால் அக்கறை காட்டுவதில்லை. நெருக்கடிக்குள் சிக்கி, விழி பிதுங்கிக் கொண்டிருக்கும் பெற்றோர்களில் பலருக்கும் இணையவழி கல்வி கசந்துவிட்டது. ஆக, முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் நெருக்கடிக்கு, உடனடியான தீர்வை எட்டாவிடின், நிகழ்காலமும் எதிர்காலமும் சூனியமாகிவிடும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

தனிமையும் இனியது; மக்களுடன் இணைவதும் இனிமையானது. இயற்கையுடன் ஒன்றித்தால் எல்லாமே இனிமையானது. பிரச்சினைகள் வரும்போது, தன்னைத்தான் ஆராயத் தனிமையின் உதவி பெரியது. எனினும் சிலரிடம் பிரச்சினைக்கு ஆலோசனை கேட்டால், அதுவே பிரமாண்டான துயரையும் தருவதாகி விடலாம். கேட்பவர்களின் தகைமை அறிந்து கேட்க வேண்டும்.

மனிதனின் குழப்ப நிலையை இயற்கை சீர்செய்கிறது. கடற்கரை, பரந்தவெளி, பூஞ்சோலை, சுற்றுலாப் பயணம் எனப் பலவழிகளில் பிடித்ததை ரசிக்கலாம்.

நெஞ்சத்தில் ஏதாவது சஞ்சம் ஏற்பட்டால், கோவில்களுக்கு மக்கள் செல்வதுண்டு. இன்னும் சிலர் தங்களுக்குப் பிடித்தமான பாடல்களைக் கேட்பார்கள். இசைக் கருவிகளை மீட்டினால், மனது குளிர்ந்துவிடும்.

தேவையின்றி தனித்து இருப்பதும் வெறுமை உணர்வை ஏற்படுத்தலாம். நல்ல நட்புகளைத் தேடுங்கள். உலகப் பெருவெளியில், நாங்கள் மட்டும் பிரச்சினைகளுடன் வாழவில்லை. எல்லா விடயங்களிலும் திருப்பம் உண்டு. கவலை ஏன்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

மற்றுமொரு பூகம்பம் காத்திருக்கிறது

எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த மே மாதம் ஒன்பதாம் திகதி, உச்சக் கட்டத்தை அடைந்திருந்த அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம், அதேமாதம் 12ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டதை அடுத்து படிப்படியாக மழுங்கடிக்கப்பட்டு உள்ளதாகவே தெரிகிறது.

எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களும் நீர்த்துப் போயுள்ளதாக தெரிகிறது. அதேபோல், ரணிலின் நியமனம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பெரும் ஆறுதலையும் கொண்டு வந்துள்ளது.

வரலாறு காணாத, பொருளாதார நெருக்கடியின் விளைவாக, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு, எரிபொருளுக்காக மைல் கணக்கிலும் நாட்கணக்கிலுமான வரிசைகள் உருவாகி, பல மணித்தியாலங்கள் நீடித்த மின்வெட்டு அமலாக்கப்பட்டு, மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக கொதித்தெழுந்து, அரசாங்கம் மண்ணைக் கௌவும் நிலை, மே மாதம் ஆரம்பத்தில் உருவாகியிருந்தது.

மக்களின் எதிர்ப்பை சமாளிப்பதற்காக ஜனாதிபதி, ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி, தமது அமைச்சர்களை இராஜினாமாச் செய்யுமாறு பணித்து, பலகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க முயன்றார். ஏனைய கட்சிகள், அதற்கு இணக்கம் தெரிவிக்காததை அடுத்து, சித்திரைப் புத்தாண்டின் பின்னர், இளம் உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தார். ஆயினும், பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண, அந்த அமைச்சர்களாலும் முடியாமல் போனது.

இந்த நிலையிலேயே, அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கொழும்புக்கு அழைக்கப்பட்ட அவரது ஆதரவாளர்கள், மே மாதம் ஒன்பதாம் திகதி, அலரி மாளிகை முன்னாலும் காலிமுகத் திடலிலும் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களைத் தாக்கினர். இதனால் நாடு முழுவதிலும் வன்முறை பரவி, அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

அத்தோடு, பிரதமர் மஹிந்த இராஜினாமாச் செய்து, திருகோணமலையில் கடற்படை தளத்தில் தஞ்சம் புக நிர்ப்பந்திக்கப்பட்டார். நாட்டில் அராஜகம் தாண்டவமாடியது. ஜனாதிபதியும் பதவியை துறந்து வெளியேறுவாரா என்று சிந்திக்கும் அளவுக்கு நிலைமை கொந்தளிப்பாக இருந்தது.

உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க, ஏனைய கட்சிகளால் முன்வைக்கப்பட்ட சகல அரசியல் திட்டங்களுக்கும் ஏற்கெனவே, ஜனாதிபதி இணக்கம் தெரிவித்து வந்தார். தமக்கு அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்காக விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற போதே, அவர் அதற்கும் தயாராகி, தமது அமைச்சர்களை இராஜினாமாச் செய்யுமாறு பணித்தார். காபந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய போது அதையும் ஏற்றுக் கொண்டார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என, மைத்திரியால் ஆரம்பிக்கப்பட்டு, ஏனைய பல குழுக்களால் முன்மொழியப்பட்ட போது, அவர் அதற்கும் இணங்கினார். அவசியமானால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையையே இரத்துச் செய்வதற்கும் தாம் சம்மதம் தெரிவிப்பதாகவும் அறிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோர வேண்டும் என எதிர்க்கட்சியினர் கூறிய போது, முன்னர் அதனை நிராகரித்தவர் பின்னர், அந்த ஆலோசனைப் படியும் நடவடிக்கை எடுத்தார். இந்த நிலைக்கு ஜனாதிபதியை தள்ளிய போராட்டம் தான், ரணிலில் வருகையால் மழுங்கடிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி, ஜனாதிபதியின் இல்லத்தின் முன்னால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் நோக்கம், ஜனாதிபதியை வெளியேற்றுவதேயாகும். அது சகல வகையிலும் நியாயமானதாகவே இருந்தது.

முதலாவதாக, அவருக்கு கிடைத்த மக்கள் ஆணையே முறைகேடாகப் பெறப்பட்டதாகும். அது, நாட்டில் இனவாதத்தைத் தூண்டி பெறப்பட்ட ஆணையாகும். அதேவேளை, ஜனாதிபதியோ அவரது அரசாங்கமோ கடந்த தேர்தல்களின் போது, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட்டனர்.

அது மட்டுமல்லாமல் அவர்களது முடிவுகள், இலங்கையை பொருளாதார ரீதியாக பிச்சைக்கார நாடாக மாற்றிவிட்டது. அந்த முடிவுகளால், நாட்டில் ஒரு சிலர் தவிர்ந்த இரண்டு கோடியே இருபது இலட்சம் மக்களில், ஒவ்வொருவரினதும் வாழ்க்கைக் கனவுகள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

“தோல்விகண்ட ஜனாதிபதியாகப் பதவி துறக்க நான் விரும்பவில்லை” என ஜனாதிபதி அண்மையில் ‘புளூம்பேர்க்’ செய்திச் சேவையிடம் கூறியிருந்தார். அதாவது, தாம் தோல்வி கண்ட ஜனாதிபதியாக இப்போது இருப்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார். எனவே, தமக்கு மக்களின் ஆணை இருக்கிறது எனக் கூறுவதற்கு, அவருக்கோ அரசாங்கத்துக்கோ தொடர்ந்தும் எந்த உரிமையும் இல்லை. அவர்கள் வெளியேறுவதே நாட்டு நலனுக்கு உகந்ததாகும்.

ஆனால், மக்கள் போராட்டங்களால், அரசாங்கத்துக்கு இப்போது அவ்வளவு ஆபத்து இல்லைப் போல் தான் தெரிகிறது. நாளாந்தம் புதுப்புது நடவடிக்கைகள் மூலம், அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த காலிமுகத் திடல் ஆர்ப்பாட்டத்தைப் பற்றி, இப்போது செய்திகள் அரிதாகவே வெளியாகின்றன.

எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களும் இப்போது நடைபெறுவதில்லை. ரணில் பிரதமராகப் பதவியேற்க முன்னர், முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்ரியால் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை, ரணில் கையிலெடுத்து முன்நகர்த்திச் செல்கிறார்.

அத்திட்டம் வெற்றியடைந்தால், சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்பதாகவே, பிரதமர் ரணிலும் அரசாங்கத்தின் ஏனைய தலைவர்களும் கூறுகின்றனர். அரசாங்கம் இத்திட்டத்தை விரும்பும் முன்னரே, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதனை வலியுறுத்தி வந்தமையால், அக்கட்சியும் அதற்கு ஆதரவு தெரிவித்து வருகிறது; அல்லது அதனை எதிர்ப்பதில்லை.

ஆயினும், பொதுவாக அரசாங்கத்துக்கு எதிரான சகல சக்திகளும் அரசியல் ரீதியாக இப்போது சங்கடமான நிலைமையை எதிர்நோக்கி இருக்கின்றன. அவற்றுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டத்தை எதிர்க்கவும் முடியாது; ஆதரிக்கவும் முடியாது. பல தசாப்தங்களாக, சர்வதேச நாணய நிதியத்தையும் உலக வங்கியையும் எதிர்த்து வரும் இடதுசாரிகளின் நிலைமையும் அதுவேயாகும்.

இத்திட்டம் வெற்றியளித்தால், அரசாங்கம் நாட்டை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்ற, தமது கடந்த கால அத்தனை பாவங்களையும் அதன் மூலம் மூடி மறைத்துக் கொள்ளும். இதுவே, கொவிட்- 19 விடயத்திலும் நடைபெற்றது.

இரண்டாவது, மூன்றாவது, நான்காவது கொவிட் அலைகள் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளாலேயே ஏற்பட்டன. அவற்றின் மூலம் நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாக, வெளிநாட்டு செலாவணியைத் தேடித் தரும் துறைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டன. ஆனால், தடுப்பூசியின் மூலம் நோய் கட்டுப்படுத்தப்பட்ட போது, அரசாங்கம் கடந்த கால நடவடிக்கைகளை மறந்து, நோயை கட்டுப்படுத்தியதாக மார்தட்டிக் கொண்டது. எனவே அரசாங்கத்தின் தற்போதைய திட்டத்தை ஆதரிப்பது, எதிர்க்கட்சிகளுக்கு கஷ்டமான காரியமாகும்.

அதேவேளை, மக்கள் அத்திட்டத்தின் மீது பூரண நம்பிக்கை வைத்து இருக்கும் நிலையில், அதனை எதிர்த்தால் தாம் மக்களின் கோபத்துக்கு ஆளாகலாம் என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கிறது. அத்திட்டத்தை விமர்சிக்கும் வகையிலான மாற்றுத் திட்டம் ஒன்றும் எந்தவோர் எதிர்க்கட்சியிடமும் இல்லை. எனவே அவர்கள் அதற்குத் தடையாகாத வகையில் செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மஹிந்த பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்து, நாட்டில் அராஜக நிலைமை தோன்றிய போது, நாட்டில் ஸ்திரத்தன்மைக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பிரதமர் பதவியை ஏற்க முன்வந்தார். அதனை மக்கள் விடுதலை முன்னணியோ வேறு எந்தவொரு கட்சியோ விமர்சிக்கவில்லை.

எனினும், நாடு மீண்டும் அராஜகத்தை நோக்கி இழுக்கப்படும் நிலைமை உருவாகி வருவதையும் அவதானிக்கலாம். பெற்றோலியக் கூட்டுத்தாபத்திடம் இருந்த எரிபொருள், ஏறத்தாழ முடிவடைந்தமையே இதற்குக் காரணமாகும். அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே, ஜூலை 10ஆம் திகதி வரை எரிபொருள் வழங்கப்படும் என அரசாங்கம் திங்கட்கிழமை (27) அறிவித்தது. அதாவது, சாதாரண மக்களுக்கு எரிபொருள் விற்கப்படாது. ஏற்கெனவே மிகச் சிறிதளவே அவர்களுக்கு எரிபொருள் கிடைத்தது. அதற்காகவும் நாள்கணக்கில் வரிசைகளில் காத்துக் கொண்டு இருக்க நேர்ந்தது; இப்போது அதுவும் இல்லை.

இந்த நிலைமை, சமூகத்தின் சகல துறைகளையும் பாதிக்கும். உணவுப் பஞ்சம் மேலும் அதிகரிக்கும். நோயாளர்கள், வீடுகளிலேயே இறக்கும் நிலைமை ஏற்படும். ஏற்கெனவே, அவ்வாறான சம்பவங்கள் பல பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலைமை, உலக சந்தையின் விலையேற்றத்தின் காரணமாகவோ வேறு இயற்கை அனர்த்தமொன்றின் காரணமாகவோ ஏற்பட்டதல்ல; ஆட்சியாளர்களின் நிர்வாக அசிரத்தையின் காரணமாக ஏற்பட்டது என்பதை, இப்போது மக்கள் அறிந்துள்ளனர்.

எனவே, மக்களின் கோபம் மீண்டும் பூகம்பமாக வெடிக்கலாம். அது வன்முறையாக மாறினால், நகரப்புறங்களிலும் தோட்டப் புறங்களிலும் பட்டினிச் சாவு சாதாரண நிலைமையாக மாறலாம். எனவே, அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதை தடுப்பது, எதிர்க்கட்சிகளினதும் போராட்டக்காரர்களினதும் பொறுப்பாகும்.

கடிதங்கள்

எரிபொருள் வரிசைகளில் பெற்ற

டோக்கன்கள் பயனளிக்குமா, பயனற்றுப்போகுமா?

இராப்பகலாகக் காத்திருந்து பெற்றுக்கொண்ட பெற்றோலுக்கான டோக்கன் கூட, பயனற்று போகுமா என மக்கள் அங்கலாய்கின்றனர்.

15 நாள்களாக பெற்றோல் வழங்கப்படாமை காரணமாக, கவலை அடைந்துள்ள ஆலையடிவேம்பு பிரதேச மக்கள், கடந்த ஐந்து தினங்களாக தொடர்ச்சியாக இராப் பகலாக வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்திக் காத்திருந்தனர்.

இந்நிலையில், இராணுவத்தினரின் உதவியுடன் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் இணைந்து, டோக்கன் வழங்க ஆரம்பித்தனர். காலை ஒன்பது மணியளவில் ஆரம்பித்த டோக்கன் வழங்கும் பணி, இரவு ஒன்பது மணிவரை தொடர்ந்தது. ஆனாலும், இலக்கமிடப்பட்ட ஓட்டோ, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சுமார் 500 பேருக்கு மாத்திரம் டோக்கன் வழங்கப்பட்டது.

மிகுதியான இலக்கமிடப்பட்ட 300 மோட்டார் சைக்கிள்களுக்கு வருகை தந்ததை உறுதிப்படுத்தி துண்டுகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் இலக்கமிடப்படாத 500 இற்கும் மேற்பட்டவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனாலும், எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னரே நாட்டுக்கு எரிபொருள் கொண்டுவரப்படும் எனும் செய்தியால் பெரும் கவலை அடைந்துள்ள பொதுமக்கள், தங்களை எரிபொருள் நிலையத்திலிருந்து அகற்ற எடுக்கும் செயற்பாடே டோக்கன் வழங்கும் திட்டம் எனவும் கூறுகின்றனர்.

அப்படி பெற்றுக்கொண்ட டோக்கன் பயனளிக்குமா, அல்லது பயனற்றுப்பேகுமா? எனவும் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

–விஜயராஜா சுகிர்தகுமார்

பெங்களூரு

அ.தி.மு.க தொண்டரின்

வாயில் குத்து

ஓ.பி.எஸ் ஆதரவாளர்கள் மீது வழக்குப்பதிவு

சென்னையில் ஓ. பன்னீர் செல்வத்தின் (ஓபிஎஸ்) ஆதரவாளர்கள் ஜெயக்குமார் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ராயபேட்டை பொலிஸ் நிலையத்தில் 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது

ஒற்றைத்தலைமை விவகாரம் தீவிரமடைந்துள்ள நிலையில், கட்சியில் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எட்டப்பாடி பழனிசாமி தரப்பினரிடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்நிலையில், எட்டப்பாடி பழனிசாமி (இபிஎஸ்) ஆதரவாளரான ஜெயக்குமார் தரப்பினர் மீது ஓபிஎஸ் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் தீர்மானங்கள குறித்து கடந்த 18ஆம் திகதியன்று ஆலோசனை செய்யவேண்டி இருந்த நிலையில் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் ஜெயக்குமாருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். அத்துடன், அவருடன் வந்த பெரம்பூர் பகுதி முன்னாள் செயலாளர் மாரிமுத்து (59) என்பவரை அதிமுக தலைமை அலுவலகத்தின் உள்ளே இருந்த நபர்கள் நீ என்ன ஜெயக்குமார் ஆதரவாளரா என ஆபாசமான வார்த்தைகளால் பேசி வாயில் குத்தி தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மாரிமுத்து அவரது மகன் முகில் ராஜ் ஆகியோர் எறுக்கஞ்சேரியில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்., உதட்டில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மருத்துவ சிகிச்சை முடித்து கடந்த 25 ஆம் திதி ராயபேட்டை பொலிஸ் நிலையம் வந்த மாரிமுத்து அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை

மிகையொலி எழுப்பினால் கைது

ஒலி மாசு விழிப்புணர்வு வாரம் ஜூலை 3 ஆம் திகதி வரை சென்னையில், அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து, பொலிஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் உரையாற்றுகையில்,

தற்போது ஒலி மாசு ஏற்படுத்தும் வாகன சாரதிகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, ரூ.100 வரை அபராதம் விதிக்கப்படுகிறது. திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டம் நடைமுறைக்கு வந்தால் ரூ.1,000 முதல் ரூ.2 ஆயிரம் வரை அபராத தொகை வசூலிக்க வாய்ப்பு உள்ளது என்றார்.

அதிக ஒலி எழுப்பும் ஹோன்களை பொருத்தி இருக்கும் வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராகவும் அதுபோன்ற ஹோன்களை பொருத்தி கொடுக்கும் வாகன திருத்துனர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படும என்றார்.

முகக்கவசம் அணியாதவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதனால் முகக்கவசம் அணிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றார்.

திருவண்ணாமலை

இளம்பெண்ணை தேடி ஆசிரமத்தில் சோதனை

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த, தாய், தந்தை இரண்டு மக்கள் உள்ளிட்ட நால்வர் அடங்கிய ஒரு குடும்பத்தினர் நித்தியானந்தா நடத்தி வரும் பிடதி ஆசிரமத்தில் சேவை செய்துள்ளனர்.

மூத்த மகளை மட்டும் அழைத்து கொண்டு ஆசிரமத்தில் இருந்து பெற்றோர் வெளியேறினர். 20 வயதுள்ள இளையமகள், நித்தியானந்தா பக்தர்களில் ஒருவராக ஆசிரமத்தில் தங்கியுள்ளார். அவரை பார்க்க பெற்றோர் செல்லும்போது, ஆசிரமத்தில் உள்ளவர்கள் தடுத்துள்ளனர்.

அதன்பின்னர் கர்நாடக பொலிஸாரின் துணையுடன் பிடதி ஆசிரமத்தில் தேடி பார்த்தபோது

மகள் குறித்த தகவல் ஏதும் கிடைக்கவில்லை. விரக்தியில் இருந்த பெற்றோருக்கு, கிடைத்த தகவல்களின் பிரகாரம் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள ஆசிரமத்துக்குச் சென்று விசாரித்துள்ளனர். எனினும் உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதுதொடர்பாக, அவர்கள் கொடுத்த முறைப்பாட்டின் பேரில், திருவண்ணாமலை கிரிவலப் பாதையிலுள்ள நித்தியானந்தா ஆசிரமத்தில், கிராமிய பொலிஸார் இரவோடு இரவாக தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி

திருமணம் செய்த 3 ஆவது நாளில் புதுமாப்பிள்ளை கைது

புதுச்சேரி லாஸ்பேட்டை பகுதியை சேர்ந்த 21 வயது மதிக்கத்தக்க இளம் பெண்ணொருவர் தனியார் கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பணி செய்து வருகிறார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு தற்கொலைக்கு முயன்று மயங்கி விழுந்தார்.

இதனால் அதிர்ச்சியடைந்த அவரது பெற்றோர் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அந்த பெண்ணிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் அதே நிறுவனத்தில் பணியாற்றும் 26 வயதானவரை, அப் பெண் 9 மாதமாக காதலித்து வந்துள்ளனர். திருமண ஆசை காட்டிய அந்நபர், பெண்ணை ஏமாற்றி பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த 15 ஆம் திகதி கடலூரை சேர்ந்த மற்றொரு பெண்ணை அந்நபர் திருமணம் செய்து கொண்டார். இதை அறிந்து தான் ஏமாற்றப்பட்டதை தாங்க முடியாமல் அதிர்ச்சியடைந்த அந்த பெண் தற்கொலைக்கு முயன்றது தெரியவந்தது.

இதையடுத்து திருமணமான 3-வது நாளில் அவரது வீட்டுக்கே சென்ற பொலிஸார், புதுமாப்பிள்ளையை கைதுசெய்து. மத்திய சிறையில் அடைத்தனர். இந்த சம்பவத்தால் மணப்பெண்ணும், அவரது குடும்பத்தினரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

புதுடெல்லி:

"ஒரே நிறுவன பணிக்கு பதில் விரும்பியபடி வேலை"

இந்தியாவிலும் பெரும் மாற்றம்: நிதி ஆயோக் அறிக்கையில் தகவல்

ஒரே நிறுவனத்தில் பணியாற்றாமல் விரும்பிய பணியை, விரும்பிய நேரத்தில் செய்து கொள்ளும் கிக் பொருளாதாரத்தில் (கிக் எகானமி) இந்தியாவில் தற்போது 77 இலட்சம் மக்களைப் பணியாற்றுவதாகவும் 2029-30 ஆம் ஆண்டில் இது 2.35 கோடியாக அதிகரிக்கும் என நிதி ஆயோக் மதிப்பிட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு உலகெங்கிலும் கிக் பொருளாதாரம், கிக் வேலை முறை பெரியளவில் பரவ ஆரம்பித்து இருக்கிறது. தாங்கள் விரும்பிய நேரத்தில் விரும்பிய பணியை, விரும்பிய நேரத்தில் செய்து கொள்ளும் இந்தமுறை கிக் என அழைக்கப்படுகிறது. குறைவான நேரத்தில் சரியான வருவாய் ஈட்ட முடிவதால் உலகம் முழுவதும் தொழிலாளர் வர்க்கம் இதனை நோக்கி ஆசையுடன் நகர்ந்து வருகிறது.

கட்டுப்பாடுகள் ஏதுமின்றி சுயமாக வேலைசெய்ய

> நிறுவனங்களும் எண்ணத் தொடங்கியதன் விளைவே இந்த கிக் எகானமி உருவானது. இதை ஃப்ரீலான்ஸ் எகானமி (Freelance Economy) என்றும் அழைக்கிறார்கள்

விரும்புபவர்களும், ஒரு குறிப்பிட்ட வேலையைத் திறம்பட செய்துமுடிக்கும் ஒருவருக்கு அதற்கு மட்டும் ஊதியம் தந்தால் போதுமானது என்று நிறுவனங்களும் எண்ணத் தொடங்கியதன் விளைவே இந்த கிக் எகானமி உருவானது. இதை ஃப்ரீலான்ஸ் எகானமி (Freelance Economy) என்றும் அழைக்கிறார்கள்.

கோழிக்கோடு

கைகளை கட்டிக்கொண்டு நீந்தும் 70 வயது பாட்டி

சாதனைக்கு வயது தடையில்லை என்பது போல 70 வயது மூதாட்டி ஒருவர் இரண்டு கைகளையும் கயிற்றால் கட்டியபடி நீச்சலடித்து அசத்தியுள்ளார்.

கேரள மாநிலம் ஆலுவாவில், வீ.கே. குன்னம் புரத்தை சேர்ந்தவர் ஆரிபா. நீச்சல் மீது அதிக ஆர்வமுள்ள இவர், முறையாக நீச்சல் பயின்றுள்ளார்.

கைகளை கயிறால் கட்டியபடி நீச்சல் பயிற்சி

பெற்றுவந்த ஆரிபா, அதனை பொதுமக்கள் முன்னிலையில் செய்துகாட்டியுள்ளார். அதன்படி ஆலுவாவில் உள்ள பெரியாறு ஆற்றில் கைகளை கயிற்றால் கட்டிக்கொண்டு 780 மீட்டர் தூரத்தை 45 நிமிடங்களில் நீந்தி கடந்துள்ளார்.

இவருடன் 11 வயது சிறுவனும், 38 வயது பெண்ணும் கலந்துகொண்டனர்.

நினைவேந்தல்

ஊடக செயற்பாட்டாளரும், மொழிபெயர்ப்பாளரும் இலக்கியவாதியுமான அமரர் வின்சன் புளோறன்ஸ் ஜோசபின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. குருநகர் புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் திங்கட்கிழமை (27) இந்த நினைவேந்தல் இடம்பெற்றது. நினைவேந்தலில் நினைவுப்பேருரையினை அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் "தமிழ் ஊடகப்பரப்பில் மொழிபெயர்ப்பியல் கலை" எனும் தலைப்பின் கீழ் நிகழ்த்தினார் (எம்.றொசாந்த்)

மூக்குக் கண்ணாடிகள் வழங்கிவைப்பு...

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலையத்தின் அனுசரணையில், பிரன்லி சிப் அமைப்பும், நியூ சன் ஸ்டார் கழகமும் இணைந்து மூக்குக் கண்ணாடிகள், சக்கர கதிரைகளை திங்கட்கிழமை (27) வழங்கிவைத்தன.

பதுளை பொது நூலக கேட்போர் கூடத்தில், வைத்து, பதுளையிலுள்ள பிந்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு இவை வழங்கிவைக்கப்பட்டன. இதில், பதுளை சுகாதார வைத்திய அதிகாரி சுரேஸ்கண்ணன் பங்கேற்றிருந்தார்.

(நூருள் ஹுதா உமர்)

இலவச பஸ் சேவை...

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி திங்கட்கிழமை (27) முதல் இரு பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. அல் ஹிக்மத்துல் உம்மா பவுண்டேசன் அமைப்பின் அனுசரணையுடன் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது,

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நஸ்ஹர்கான் தலைமையில் அல்ஹிக்மத்துல் உம்மா பவுண்டேசன் அமைப்பின் பணிப்பாளரும் சமூக சேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

(எப்.முபாரக்)

பூங்கா திறப்பு...

திருகோணமலை பிராந்திய சுகாதார பணிமனையின் நிதியுதவியினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டபறிச்சான் கிளினிக் நிலையம் மற்றும் ,அவ்வளாகத்தில் மூதூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்காவும் திங்கட்கிழமை (27) மாலையில் மக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவாவின்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்தியர் சமீம்-திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி ,மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏஎம் அரூஸ்,வட்டார உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் பிரதேச மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

(எப்.முபாரக்)

தொலைக்காட்சிப் பெட்டி கையளிப்பு...

மலையக தொழிலாளர் வர்க்கம் அமைப்பினரால் கஷ்டப்பிரதேச பாடசாலையான மமா/க/வத்/ சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி Smart தொலைக்காட்சிப் பெட்டி வழங்கி வைக்கப்பட்டது.

அமைப்பின் பன்விலைப் பகுதி இணைப்பாளரான மார்டின் பிளிப்பின் மனைவி திருமதி பிளிப் அமுதா, தொலைக்காட்சியைப் பெட்டியை அதிபர் ம. நவநீதன் மற்றும் ஆசிரியர்களிடம் கையளிப்பதையும் அதிபர் மற்றும் ஆசிரியை திருமதி செல்வநாயகி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம் (மெய்யன்)

அமெரிக்கா

கனரக வாகனத்தில் இருந்து

46 சடலங்கள் மீட்பு

அமெரிக்கா, டெக்சாஸ் மாகாணத்தில் ரயில் தண்டவாளம் அருகே நின்ற கனரக வாகனமொன்றில் இருந்து 46 சடலங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் அகதிகள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் 16 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெயிலின் தாக்கத்தால் அகதிகள் உயிரிழந்து இருக்கலாம் என கூறப்படும் நிலையில், பொலிஸார் இது குறித்த தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உக்ரேன்

வீட்டில் ஏவுகணை விழுந்த போதும் சவரம் செய்த நபர்

உக்ரேன் மீதான ரஷ்ய போர், சுமார் 120 நாள்களைத் தாண்டி நீடித்து வருகின்றது.

இப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளதோடு, இலட்சக்கணக்கான மக்கள் உக்ரேனை விட்டு வெளியேறி, அயல் நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

அதே சமயம் உக்ரேன் இராணுவமும் தொடர்ச்சியாக ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன் காரணமாக வெடிகுண்டு சத்தம் என்பது உக்ரேன் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைந்த ஒன்றாக மாறிப்போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், ரஷ்யா ஏவிய ஓர் ஏவுகணை ஒரு நபரின் வீட்டை உடைத்துக்கொண்டு விழுந்துள்ள நிலையில், அந்நபர் கலவரமில்லாமல் சவரம் செய்து கொண்டிருந்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

லண்டன்

மசாஜ் நிலையத்தில் பாலியல் சீண்டல்

11 ஆண்டுகள் சிறை

லண்டனில் மோங்கோன் தோப்வான் என்ற நபர், தாய் மசாஜ் நிலையமொன்றை நடத்தி வந்துள்ளார். 54 வயதான அவர், தனது மசாஜ் நிலையத்திற்கு வரும் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டுள்ளார். குறிப்பாக, 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் திகதி குறித்த மசாஜ் நிலையத்திற்கு வந்த யுவதி ஒருவர் மீது, பாலியல் ரீதியில் சீண்டிய நிலையில், கைது செய்யப்பட்ட மோங்கோன் தோப்வான் அதன் பின்னர் நிபந்தனைக்கு உட்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும், கடந்த ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் திகதி மீண்டும், மசாஜ் நிலையம் வந்த பெண்களிடம் அவர் தவறாக நடக்கவே தோப்வான் கைது செய்யப்பட்டார்.

இவ் வழக்கின்போது, அவர் செய்த தவறு ஊர்ஜிதமானது. அவருக்கு 11 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்கா

மூச்சுவாங்கிய காதலிக்கு காத்திருந்த இன்ப அதிர்ச்சி



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அண்மையில் மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொண்ட ஒட்டப்பந்தைய வீராங்கனையான மேடிசன், அண்மையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் சில விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அப் பதிவில் அவர் தெரிவித்ததாவது: “மரதன் போட்டியில் 26.2 மைல் இறுதிக் கோடாக இருந்தது. அத் தருணம் எனது சிறந்த நண்பர் கிறிஸ்டோபர் ஜேம்ஸ் உடனான எனது வாழ்நாளின் தொடக்கக் கோடாக மாறியது.

அவர் கையில் மோதிரத்துடன் நான் பந்தயத்தை முடிக்கும் வரை காத்திருந்தார். பின்னர், ‘நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன்’ எனத் தெரிவித்தார். ஜேம்ஸ் இதுவரை காலமும் எனது முதுகெலும்பாக இருந்தார்” என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

ஒரே வைத்தியசாலையைச் சேர்ந்த

14 செவிலியர்கள் கர்ப்பம்

ஒரே நேரத்தில் ஒரே வைத்தியசாலையைச் சேர்ந்த 14 செவிலியர்கள் கர்ப்பமான சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் சென் லூக் என்ற வைத்தியசாலையிலேயே இச்சம்பவம் அரங்கேறியுள்ளது.

இதுகுறித்து பிரபல ஊடகமொன்றுக்கு அவ் வைத்தியசாலையைச் சேர்ந்த செவிலியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், “நான் கருவுற்றிருப்பதை என் குடும்பத்திற்கு சொல்வதற்கு முன்பு, சக ஊழியர்களிடமே பகிர்ந்து கொண்டேன். இதன் போது, அவர்களில் பலரும் தாங்களும் கருவுற்று இருப்பதாகத் தெரிவித்தனர். இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இவ் வைத்தியசாலையைச் சேர்ந்த செவிலியர் சிலர், சமீபத்தில்தான் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளனர். அத்துடன் இந்த வைத்தியசாலையில் செவிலியராக சேர்ந்தாலே கருவுறலாம் என்ற அளவுக்கு பலரும் கூறிவருகின்றனர்” என்றார்.

குரோஷியா

அசர வைத்த புதுமண தம்பதி



குரோஷியாவை சேர்ந்த பிரபலங்களான கிறிஸ்டிஜன் இலிசிக், ஆண்ட்ரியா ட்கோவ்செவிக் ஆகியோருக்கு சமீபத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில், புதுமண தம்பதி சஹாரா பாலைவனத்தின் வழியாக, 70 கிலோ மீற்றர் தூரம் 20 மணிநேரம் செல்லக்கூடிய உலகில் ஆபத்தான ரயில் எனக்கூறப்படும் ரயிலில் போட்டோஷூட் நடத்தியுள்ளனர்.

குறித்த ரயிலில் 200 பெட்டிகள் உள்ளன எனவும், அப்பெட்டிகள் அனைத்திலும் இரும்புத்தாதுகள் மட்டுமே நிரப்பப்பட்டிருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

மேலும், பகலில் 45 பாகை செல்சியஸ் வெப்ப நிலைக்கும் அதிகமாகவும் இரவில் 0பாகை வெப்ப நிலைக்கு கீழாகக் காணப்படும் எனவும் கூறப்படுகின்றது.

இதுகுறித்து கிறிஸ்டிஜன் கூறியதாவது; “நாங்கள் ஏற்கெனவே அருகில் உள்ள தாய்லாந்து, சீஷெல்ஸ், அருவா, குராக்கோ, பஹாமாஸ், செயின்ட் லூசியஸ், மொரிஷியஸ் உள்ளிட்ட 150 நாடுகளுக்கு மேல் சென்று அங்குள்ள அழகான கடற்கரையை பார்த்திருக்கிறோம். ஆனால் Mauritania மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்ட சுற்றுலா தளமாக உள்ளது என்பதை அறிந்துள்ளோம். ஏனென்றால் ஒவ்வோர் ஆண்டும் 6,000 பேருக்கு மேல் வருகை தராத இடமாக இது உள்ளது.

இங்கு நாங்கள் சென்ற கிராமத்தில் இருந்த மக்கள், அவர்களின் பாரம்பரிய கலாசார முறைப்படி எங்களது திருமணத்தை நடத்தி, மகிழ வைத்தனர்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்:

இலங்கையை வீழ்த்துமா அவுஸ்திரேலியா?

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், முதலாவது போட்டியானது இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்குள் இத்தொடர் அடங்குவதோடு, முதலிடத்தில் அவுஸ்திரேலியாவும், நான்காமிடத்தில் இலங்கையும் காணப்படுகின்ற நிலையில் இத்தொடரானது இரண்டு அணிகளின் நிலைகளில் தாக்கம் செலுத்துகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் பதும் நிஸங்க அணிக்குத் திரும்பவுள்ளதோடு, டெஸ்ட் போட்டிகளில் ஜெஃப்ரி வன்டர்சே அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியில் மிற்செல் ஸ்வப்ஸன் விளையாடுவதை அணித்தலைவர் பற் கமின்ஸ் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் போட்டிக்கு முன்பாக ட்ரெவிஸ் ஹெட் எவ்வாறு இருக்கிறார் என்பதைப் பொருட்டு அவரும் அவர் விளையாட முடியாமல் போகும் பட்சத்தில் கிளென் மக்ஸ்வெல்லும் களமிறங்குவர்.

இத்தொடரைப் பொறுத்த வரையில் மர்னுஸ் லபுஷைன், ட்ரெவிஸ் ஹெட், கமரொன் கிறீன், அலெக்ஸ் காரி ஆகியோர் எவ்வாறு லசித் எம்புல்தெனிய, ரமேஷ் மெண்டிஸ் ஆகியோரை எதிர்கொள்கின்றனர் என்ற நிலையிலேயே தொடரின் போக்கு அமையவுள்ளது.

தவிர, இலங்கையணியின் சிரேஷ்ட வீரர்களான அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோருடன் அவுஸ்திரேலியாவின் உஸ்மான் கவாஜா, ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோரிடமிருந்து நீண்ட இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படும்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தொடர்:

ஆரம்பப் போட்டியில் வென்ற லிவர்பூல்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தங்கம், வெள்ளி வெற்றிக் கிண்ணத் தொடரின் ஆரம்பப் போட்டியில் நடப்பாண்டு சம்பியனான லிவர்பூல் வென்றது.

புத்தளம் கால்பந்தாட்டலீக்கில் பதிவாகியுள்ள 12 அணிகள் பங்கேற்கும் இத்தொடரில், புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற குறித்த போட்டியில் த்றீ ஸ்டார்ஸை 3 - 1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றிருந்தது.

இத்தொடரில் 12 அணிகளும் இரண்டு குழுக்களாக பிரிந்து போட்டியிடவுள்ளதுடன், போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் தங்கக் கிண்ண பிரிவுக்குள்ளும், தோல்வியடையும் அணிகள் வெள்ளிக் கிண்ண பிரிவுக்குள்ளும் உள்வாங்கப்பட்டு தொடர்ந்து இரண்டாம் கட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளதாக புத்தளம் நகர சபைத் தலைவரும், புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக் தெரிவித்தார்.

இத்தொடரில் புத்தளம் லீக்கில் பதிவாகியுள்ள மேற்கூறப்பட்ட இரண்டு அணிகளுடன், நியூ ஸ்டார்ஸ், அல்-அஷ்ரக், ஒடிடாஸ், ட்ரிபிள் செவன், எருக்கலம்பிட்டி, பேர்ள்ஸ், விம்பிள்டன், யுனைடெட், நியூ ப்ரண்ட்ஸ், போல்டன் ஆகியன இடம்பெற்றுள்ளன.

நியூசிலாந்தை வெள்ளையடித்த இங்கிலாந்து

நியூசிலாந்தை இங்கிலாந்து வெள்ளையடித்தது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் வென்றிருந்த இங்கிலாந்து, லீட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினமிரவு முடிவுக்கு வந்த மூன்றாவது டெஸ்டையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என நியூசிலாந்தை வெள்ளையடித்துள்ளது.

நேற்று முன்தின ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து ஆரம்பத்திலேயே ஒலி போப்பை 82 ஓட்டங்களுடன் டிம் சௌதியிடம் இழந்தது.

எனினும், ஜோ றூட்டின் ஆட்டமிழக்காத 86, ஜொனி பெயார்ஸ்டோவின் ஆட்டமிழக்காத 71 ஓட்டங்களோடு 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் இங்கிலாந்து வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஜேக் லீச்சும், இத்தொடரின் நாயகனாக இங்கிலாந்து சார்பாக றூட்டும், நியூசிலாந்து சார்பாக டரைல் மிற்செல்லும் தெரிவாகினர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 329/10 (துடுப்பாட்டம்: டரைல் மிற்செல் 109, டொம் பிளெண்டல் 55, டிம் சௌதி 33, கேன் வில்லியம்ஸன் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 5/100, ஸ்டுவர்ட் ப்ரோட் 3/62, மத்தியூ பொட்ஸ் 1/34, ஜேமி ஒவெர்ட்டன் 1/85)

இங்கிலாந்து: 360/10 (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 162, ஜேமி ஒவெர்ட்டன் 97, ஸ்டுவர்ட் ப்ரோட் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 4/104, டிம் சௌதி 3/100, நீல் வக்னர் 2/75, மிஷெல் பிறேஸ்வெல் 1/54)

நியூசிலாந்து: 326/10 (துடுப்பாட்டம்: டொம் பிளெண்டல் ஆ.இ 88, டொம் லேதம் 76, டரைல் மிற்செல் 56, கேன் வில்லியம்ஸன் 48 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 5/66, மத்தியூ பொட்ஸ் 3/66, ஜேமி ஒவெர்ட்டன் 1/61, ஜோ றூட் 1/29)

இங்கிலாந்து: 296/3 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 86, ஒலி போப் 82, ஜொனி பெயார்ஸ்டோ ஆ.இ 71 ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 1/68, மிஷெல் பிறேஸ்வெல் 1/109)

பங்களாதேஷுக்கெதிரான

தொடரைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள், சென். லூசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று அதிகாலை முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்டையும் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என தொடரைக் கைப்பற்றியுள்ளது.

நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ் அல்ஸாரி ஜோசப், ஜேடன் சியல்ஸிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 186 ஓட்டங்களையே பெற்றது. நுருல் ஹஸன் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில், 13 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் கைல் மேயர்ஸ் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பங்களாதேஷ்: 234/10 (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 53, தமிம் இக்பால் 46, ஷொரிஃபுல் இஸ்லாம் 26, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 26, அனமும் ஹக் 23, எபொடொட் ஹொஸைன் ஆ.இ 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 3/55, ஜேடன் சியல்ஸ் 3/53, அன்டர்சன் பிலிப் 2/30, கைல் மேயர்ஸ் 2/35)

மே. தீவுகள்: 408/10 (துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 146, கிறேய்க் பிறத்வெய்ட் 51, ஜோன் கம்பெல் 45, ஜெர்மைன் பிளக்வூட் 40, ஜோஷுவா டா சில்வா 29, றேமன் றீஃபயர் 22, கேமார் றோச் ஆ.இ 18 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 5/106, மெஹிடி ஹஸன் மிராஸ் 3/91, ஷொஃரிபுல் இஸ்லாம் 2/76)

பங்களாதேஷ்: 186/10 (துடுப்பாட்டம்: நுருல் ஹஸன் ஆ.இ 60, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேமார் றோச் 3/54, அல்ஸாரி ஜோசப் 3/57, ஜேடன் சியல்ஸ் 3/21)

போட்டியின் நாயகன்: கைல் மேயர்ஸ்

தொடரின் நாயகன்: கைல் மேயர்ஸ்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 29 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.